உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்

மின் இணைப்பாளருமாகிய

# சின்னத்துரை நவரத்தினம்

அவர்களினதும்

# சின்னத்துரை பாலகிருஷ்ணன்

அவர்களினதும்

## சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

2-7-1990

கற்பகவிநாயகர் அச்சகம், வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# தோத்திர மாலை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருவையாறு திருவிருத்தம்

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச்
சிறந்த செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன
மொய்த்தி ருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன
பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை
யாறனடித் தலமே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதத்திருவந்தாதி

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந்தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

## பெரியபுராணம்

அண்ண லேயெனை யாண்டு கொண்
டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி
வேத நாயகனே
கண்ணி னுல்திருக் கைலையில்
இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்
புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெரு வாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## கந்தரநுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்கநின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி
[போற்றி

## வைரவர் தோத்திரம்

வெஞ்சினப் பரியழல் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆல மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேல் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்கள் ஏத்துவாம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நமோ நாரயணாய



மூளாய் அமரர்கள்

சின்னத்துரை நவரத்தினம்

சின்னத்துரை பாலகிருஷ்ணன்

அவர்களது ஞாபகார்த்தமாகப்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாளின்

பாதாரவிந்தங்களுக்கு இப்பாடல்கள்

சமர்ப்பிக்கப் பெறுகின்றன.

# பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள்

# அந்தாதிக் கீர்த்தனைகள்

### கணபதி ஸ்துதி

1. ராகம்; ஸாரங்கா — தாளம்: ஆதி

பல்லவி

குணபதி கோவிந்தனைக் கொஞ்சு தமிழிற் பாடக்
கணபதியே அருள்வாய் — பொன்னாலை

அனு பல்லவி

இணையிலாத் திருத்தலம் இன்பப் பொன்னாலையில்
துணையென அபயமும் தூக்கி அஞ்சல் அருளும்

சரணம்

பாரதக் கதையினுள் கீதை எழுதியவன்
சாரதியாய் அன்று சஞ்சயன் தேர் ஓட்டியவன்
வேரதுவாய் வேதச் சாரமாய்த் திகழ்பவன்
சாரங்கனைத் தமிழில் சந்ததம் பாடி ஏத்தக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏத்திப் பதம் பாடுவேன்

2. ராகம்: ஸிம்மேந்திரமத்யமம் தாளம்; ஆதி

### பல்லவி

ஏத்திப் பதம் பாடுவேன் — **பொன்னாலை**
சூத்திரதாரி கண்ணன் சுந்தரப் பதம் போற்றி

### அனு பல்லவி

கூத்தின் கரம் எடுத்துக் கோவர்த்தனம் பிடித்துக்
காத்து எமக்கருளும் காளிங்க நர்த்தனனை

### சரணம்

**நரஸிம்மேந்திர மத்யம**மாகி நின்றான்
பிரகலாதன்னை அன்று பிரியமுடன் ரஷித்தான்
இரணியனைக் கொன்றே இடர்களைத் தீர்த்து வைத்தான்
புரமெனும் **பொன்னாலை வரதராஜப்பெருமாள்.**

## வரதராஜப்பெருமாள் வரந்தருவான்

3. ராகம்; ஸாவேரி தாளம்: ஆதி

### பல்லவி

**வரதராஜப்பெருமாள்**வரந்தருவான் என்றே
விரத மிருந்தேனடி — **பொன்னாலை**

### அனு பல்லவி

கரதலச் சங்கொடு சக்கரம் ஏந்தும் ஹரி
உரக சயன மீதில் உறங்கி விட்டானோடி?

### சரணம்

**ஸாவேரி** சோதரன் ஸ்யாமளன் வருவானோ?
ஆவேசம் கொள்ளுதடி அவன் இன்பம் தருவானோ?
நாவே அவன் நாமம் நாளும் நவிலுதடி
பூவேதவல்லி போற்றும் **பொன்னாலைத்** தலம் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாலைத் தலம் வளரும் கண்ணா!

4. ராகம்; கானமூர்த்தி                                        தாளம்; ஆதி

### பல்லவி

**பொன்னாலைத்** தலம் வளரும் கண்ணா — உன்னை
என்னாளும் நான் துதித்தேன் ஏனோ இந்த மௌனம்?

### அனு பல்லவி

பன்னக படந்தனிலே பதந்தூக்கி நர்த்தனங்கள்
முன்னாளில் ஆடல் செய்தாய் முரளி **கானமூர்த்தி**

### சரணம்

காத்தருளும் கருணைக் கண்ணனும் நீயன்றோ!
பார்த்தனின் தேரோட்டும் பரந்தாமன் நீயன்றோ!
கீர்த்திநிறை **பொன்னாலைக்** கிருஷ்ணனும் நீயன்றோ!
நேத்திர அருட்பார்வை நெஞ்சில் நினையாயோ?

## நெஞ்சில் நினை ஆயனை

5. ராகம்; ரஞ்ஜனி                                        தாளம் ஆதி

### பல்லவி

நெஞ்சில் நினை ஆயனை — மனமே
ரஞ்ஜனி சோதரனை கொஞ்சும் தாமோதரனை

### அனு பல்லவி

வஞ்சி மஹாலக்ஷ்மி நெஞ்சில் உறைபவனை
தஞ்சம் என்றே கண்ணன் செஞ்சரணம் துதித்தே

### சரணம்

கோபி மனோஹரன் கோவர்த்தனோதரன்
ஆவினம் மேய்த்திடும் அனந்த நாராயணன்
பாவலர் போற்றும் வண்ணன் பரந்தாமன் ஸ்ரீ கிருஷ்ணன்
மேவிடும் **பொன்னாலை** மேகவர்ண ஸ்யாமளனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேகவர்ண ஸ்யாமளன்

6. ராகம்; காபி தாளம் ஆதி

### பல்லவி

மேகவர்ண ஸ்யாமளனை முகுந்தஹரி கேசவனை
நாகபட மீதிலாடும் நந்தனைத்துதி மனமே

### அனு பல்லவி

தாகமுடன் **வரதராஜன்** தாளிணை பணிபவர்க்கே
போக போக்கியம் தருவான் **பொன்னுலைக் கிருஷ்ணனவன்**

### சரணம்

சந்தரி**காபி**ம்பமென சாரும் நந்தன்முகம் தோன்றும்
மந்திரமாயக்குழலில் மானிலமே மயங்கி நிற்கும்
சுந்தரநகர் **பொன்னுலை** சோபித்திலங்கும் கோயில்
வந்துவலம் செய்து அந்த நந்தகோ பாலனைப்பாடு.

## நந்தகோ பாலனைப்பாடு

7. ராகம்; சுருட்டி தாளம்; ஆதி

### பல்லவி

நந்தகோ பாலனைப்பாடு — நெஞ்சே
சுந்தரப் **பொன்னுலைக்** கோவிந்தன் பதம் நாடு

### அனு பல்லவி

வந்த வினைகளெல்லாம் **வரதராஜன்** தீர்ப்பான்
மந்தரம் தூக்கிக் காத்த மாதவனும் கண்ணன்

### சரணம்

சோலையில் மங்கையரின் சேலை **சுருட்டி**யவன்
பாலையெல்லாம் குடித்துப் பானைகள் உடைத்தவன்
ஆல மிலையின் மேலே அனந்தசயனம் கொண்ட
நீல மேகவர்ணன் நிமலன் **வெங்கடேசன்.**

ஆக்கம்; கவிமாமணி
இணுவில்
**ந. வீரமணிஐயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணத்து மூளாய்ப்பதி வாசர்களான

அமரர்கள்

சின்னத்துரை நவரத்தினம்

சின்னத்துரை பாலகிருஷ்ணன்

# நினைவஞ்சலிப் பாமாலை

ஒருவயிற்றி லேயுறைந் தொன்றய் வளர்ந்து
மருவினிய அன்புடனே வாழ்ந்தார் – உருகிபழச்
சென்றூர் நவரத்னம் சீர்பால கிட்ணனுடன்
நன்றும் இறைதான் நயந்து.

தாளாண்மை மிக்க தகைமையர் வாழும்
மூளாய்ப் பதியினில் முதன்மைசேர் குடியிற்
பன்னிடு புகழ் பரவிடு பண்பினர்
சின்னத் துரையெனும் செம்மல் எழில்திகழ்
பாக்கியம் என்னும் பாவையை மணந்து
நீக்கரும் அன்புடன் நிறையறம் காத்து
வாழ்ந்தனர் அவர்தம் மாட்சிகால் இல்லறப்
பண்பின் பயனுய்ப் பகர்புகழ் புத்திரர்
நால்வரும் புத்திரி நல்லாள் ஒருத்தியும்
புவியிடை யுதித்தனர் போற்றிடும் அவர்களில்
மூத்தோர் நவரட்ண அண்ணலாம் அவரும்
வளர்பிறை எனவே வளர்ந்துநற் பருவம்
எய்திய காலை ஏந்தெழில் மங்கையாம்
புவனேஸ் வரியினை மணந்தனர் இவர்கள்
இல்லற வாழ்விலே இரதிமத னுமெனக்
கூடிக் குலவிக் கோதிலா அறம்பல
ஆற்றினர் இவர்கட் கைவர் மக்களாம்
புலேந்திரன் தர்ம பாலன் ஜெயரஞ்
சினியொடு பத்ம லோசனி மற்றும்
கிருஷ்ண வதனி கேடிலாக் குணத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவர் தம்பி ஆகிய பால
கிருஷ்ணன் கிளரெழில் விமலா தேவியை
நன்மணம் புரிந்து நலந்திகழ் வாழ்வினில்
திகழ்ந்தே மூவர்மக்களைப் பெற்றனர்
மதனகோ பாலன் மங்க ளேஸ்வரி
ரவிச்சந் திரனும் இம்மூ வர்களும்
பெற்றோர்க் கிதயம் களித்திட வாழ்குவர்
நவரத் தினத்தின் நல்லுடன் பிறப்பாம்
மகேஸ்வரி மங்கை சின்னை யாவெனும்
நல்லார் தம்மை நானிலம் போற்றிட
இல்லத் தலைவராய் ஏற்றினி தாக
நல்லறம் போற்றி நானிலந்தன்னில்
சிவபாக் கியத்தொடு துரைராசாவையும்
நந்தினி என்னும் நங்கைநல் லாளையும்
பிள்ளைச் செல்வமாய்ப் பெற்றுயர்ந் தனளே
இவனின் இளவல்கள் சின்னரா சாவும்
மிருதங்கக் கலை வல்லவ ராகிய
மகேந்திர னென்னும் மாண்பினர் தாமும்
ஆருவர் இவர்கள் அன்பினுல் ஒன்றி
ஐந்துடல் தனிலோர் உயிரமைந் தாலென
ஒற்றுமைக் கிலக்கென ஒன்றியே வாழ்குவர்
இவ்வா றிலங்கி எல்லார் களுக்கும்
இனியராய் வாழ்ந்த இவர்களின் இளையவர்
பால கிருஷ்ணன் நண்ணிய பிணியினுல்
வருந்திப் படுக்கையில் வீழ்ந்தகா லத்தில்
தம்பியைப் பார்த்தே ஆறுதல் உரைத்திட
வந்து சிறிதே மனக்கனி வோடே
உரையும் ஆடி ஓரிரு கணத்தில்
அமர்ந்தஆ சனத்தில் அண்ணல் நவரத்னம்
தலைசரிந்திடவே சாய்ந்தனர் மண்ணிடை
வாழ்நாள் ஒழிந்தது ஊனுடல் சரிந்தது
புகழுடல் நாங்கிப் புத்தே ளிர்தம்
உலகினை அவரும் அடைந்தசின் னளில்
அண்ணனின் வழியினைத் தாமுமே பற்றி
பால கிருஷ்ண அண்ணலும் நடந்தனர்
இவ்விரு பேரதும் இழப்பத னுலே
மனைவிய ரோடே மக்களும் கூடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தவர் மற்றும் உறவினர் உற்ருர்
யாவரும் கூடிப் புவிமிசை வீழ்ந்து
கல்லும் கரைந்திடக் கசிந்தழும் காட்சி
உண்மையில் வேதனைக் குரியதே யன்ருே?

## புலம்பல்

''உயிருள் உயிராய் உறைந்தம ஞுளரே
அயர்வினை அளித்தேனை அரைவழி விடுத்துச்
சென்றீர் அந்தோ செல்கதி அறியேன்''
என்றே புவனேஸ் வரிபுலம் பிடலும்
''கலைநிறை செல்வரே! கனியனை மொழியீர்
அலைகடல் போலும் அன்பினின் கடலே
எமைப்பிரிந் தையா எங்ஙனம் சென்றீர்''
எங்கள் தாயுடன் தந்தையாம் உம்மையும்
இழந்துமே கதறி இதயம் உருகிஞேம்
''பெற்றெமை வளர்த்துப் பெருமைகள் ஈந்து
நற்றிறத் திருத்திய நல்லஎம் ஐயா!
உங்களைப் பிரிந்திவ் வுலகில் வாழுதல்
எங்ஙனம்'' என்றே அன்பார பிள்ளைகள்
கதறிக் கதறிக் சுளைந்துரு கிடலும்
''ஐயோ! ஓர்வயிற் றமர்ந்துமோர் குருதியில்
வையத் துதித்த மக்கள் நாங்கள்
உங்களைப் பிரிந்தே எங்ஙனம் உய்குவம்
என்றுடன் பிறப்புகள் கன்றிடு இனத்தோடு
கலங்கிக் கண்ணீர்க் கடலிமை வீழ்ந்து
மீண்டிட லறியாது புலம்பியே அழலும்
மைத்துனர் பாய்க்கியமுடன் மைத்துனி மார்கள் மற்றுள
உற்றவர் யாவரும் ஓலமிட் டழலும்
காணும் கண்களும் கேட்கும் செவிகளும்
இருப்பல ஆதலின் இழகியே நைந்து
கதறிக் கசிந்திடக் காலனும் வைத்தனன்
கொடுமை யிதனிலும் வேறெதும் உளதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றம்

வையத் துதித்தவர்கள் மாளாது வாழுவது
மெய்யென்று பொய்யாமிம் மேனியென — ஐயமிலா
தெண்ணி உடன்பிறந்த இவ்விருவர் ஆன்மாவும்
நண்ணியிறை தாளடைதல் நாடு.

அமரர்கள்

சின்னத்துரை நவரத்தினம்
சின்னத்துரை பாலகிருஷ்ணன்

**ஆன்மாக்கள்**

ஆடல்வல்லான் அடிசேர்ந்து
ஈறிலாப் பேரின்பம் எய்துக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்

---

### சவுதி மகன் (பாபு) புலப்பல்

எலியின் மீது ஏறிவரும் ஐங்கரனே என்னை சவூதிக்கு அன்புடன் அனுப்பிய தந்தையை ஏன் பறித்தாய்?

பார்வதியைப் பாகம் கொண்ட பரமேஸ்வரனே பாவம் எனது அப்பாவை ஏன் பறித்தாய்?

வேல் பிடித்து வேண்டும் வரம் அருள்வோனே வேங்கையான எமது அப்பாவை ஏன் பறித்தாய்?

பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனே ஏழ்மையான எம் குடும்பத்தலைவரை ஏன் பறித்தாய்?

புலியின் மீது ஏறிவரும் மணிகண்டனே புவனம் போற்றும் அப்பாவை ஏன் பறித்தாய்?

செந்தாமரையில் விற்றிருக்கும் நான் முகனே சென்ற பயணம் திரும்பு முன்னர் உன்னடியில் சேர்த்தாயே!

பாவிகளை இரட்சிக்கும் பரமபிதாவே பாவம் எங்கள் அப்பாவை ஏன் பறித்தாய்?

நாற்றிசையும் புகழ் பரப்பும் நபிகள் நாயகமே என் தங்கைகளின் படிப்பு முடியு முன்னரும், நான் சவுதியால் திரும்பு முன்னரும் அப்பாவை காலன் அழைக்க விட்டீர்களா?

அப்பா சுமந்த சுமை என் சுமையில் விட்டீர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

மறைந்தும் மறையாத திரு. நவரத்தினம் அவர்களை கடந்த நான்கு வருடகாலமாகவே நான் அறிவேன். இக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் அவரின் சேவை மனப்பாண்மை எல்லோரும் அறிந்ததே.

சேவை மனப்பாண்மை, எளிமை இரக்கம் என்பன அவருடன் கூடப்பிறந்தவை. இதனுலோ என்னவோ 1987 அக்டோபரில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் இரவு பகல் என்று பாராது, தன்னலம் கருதாது சேவையாற்றினுர். அக்காலத்தில் அவர் செய்த உதவி என்றும் மறக்கமுடியாதது. மேலும் அவ்வாறுன சூழ்நிலை மீண்டும் ஒரு முறை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அன்னுரின் மறைவு எமக்கு பேரிழப்பாகிவிட்டது குறித்து மனம் வருந்துகிரேம், இப்படியான காலகட்டத்தில் சிக்குண்டு அல்லலுறக் கூடாதென்பதற்காகவே ஆண்டவன் அவரை அரவணைத்துக் கொண்டார் போலும்.

உற்ருர், உறவினர் நோயுற்று இவ்வைத்தியசாலையில் இருந்த காலத்தில் அருகிலிருந்து கண்ணும் கருத்துமாய் அவதானித்து தன்னுலான உதவிகளைச் செய்துள்ளார் அவரது இரக்க சிந்தைக்கு இது சான்று.

இவ்வைத்தியசாலையின் நீர் இறைக்கும் இயந்திரம் எழுப்பும் தனக்கே உரித்தான நாதமும், மின்சார விளக்குகள் திடீரென அணைந்து கொள்ளும்போது சூழ்ந்து கொள்ளும் இருளும் அன்னுரின் உருவை எம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறது. ஒளி கொடுப்பதுதான் அவர் தொழிலாயிற்றே.

அன்னுரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்பதோடு மட்டுமல்லாமல் அன்னுரின் குடும்பத்தாருக்கு நம்மாலான உதவிகளை நல்குவோமாக.

வைத்திய அதிகாரியும்,
ஊழியர்களும்.
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நீண்டகாலமாக மின் சாரப்பகுதியில் கடமையாற்றிவரும் சகஊழியர்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரியவருமாகிய அமரர் சின்னத்துரை நவரத்தினம் அவர்கள் 30-05-1990 அன்று இரவு திடீரென உயிர் நீத்ததை அறிந்ததும் அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்தேன். அமரர் நவரத்தினம் அவர்கள் பெயருக்கேற்ற வகையின் அன்பும், பண்பும், அடக்கமும் உடையவர். என்னுடன் சக ஊழியராக மின்சாரப்பகுதியில் வேலை செய்தவர். அவர் என்னுடன் சகோதரர் போலவும், சிறந்த ஆலோசகராகவும் பணிபுரிந்ததை என்றும் என்னால் மறக்கமுடியாது. கூட்டுறவு வைத்தியசாலையின் தேவைகளைக் காலம் இடம் அறிந்து செய்தமையை என்றென்றும் யாராலும் மறக்க முடியாது. எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகி ஆஸ்பத்திரியின் நலனுக்கும், முன்னேற்றத்துக்கும் அயராது உழைத்த உத்தமர். விதி யாரைத்தான் விட்டது. தன்னுடைய அருமை மனைவியையும், அன்புப் பிள்ளைகளையும் கலங்க வைத்து காலன் கவர்ந்தது கவலைக்குரியதென்றாலும் அவர் இறந்த கவலையைத் தாங்கமுடியாது. அவரின் இளைய சகோதரர் பாலு என்பவரும் அடுத்து நான்காம் நாளே உயிர் நீத்தார். என்னே இயற்கையின் நியதி. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தே அவரின் பிரிவால் கவலை அடைந்துள்ள அவரின் மனைவி, பிள்ளைகளுக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்து உற்றார், உறவினர், நண்பர்களையும் ஆறுதலடையும்படி வேண்டுவதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

இங்ஙனம்
முருகேசு நடராசா
சக ஊழியர்
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் இணைப்பு வல்லுனர் அமரர்

திரு சின்னத்துரை – நவரத்தினம்

அவர்களுக்கு எமது

# இரங்கலுரை

மூளாயில் பிறந்து, இல்லறம் நடாத்தி, பணிபுரிந்து அமரத்துவமெய்திய அமரர் திரு. சி. நவரத்தினம் அவர்களின் அமரத்துவ செய்தி கேட்டு திகைத்தோம். உண்மையா? எனக் கேட்டு மனம் உருகினோம். எவ்வித நோயினின்றும் காப்பாற்றும் திறமையும் வல்லமையுமுள்ள வைத்தியசாலையில் தனது பல்லாண்டு பணியின் அன்று தனது இறுதிநாட் கடமை என்பதை உணராது விடைபெற்று, மனைவி, மக்களைப்பார்க்கும் ஆவலோடு வீடு சென்றார். மனை மக்களைப்பார்த்து ஒரு சில நிமிடத்தில் மார்பில் ஏற்பட்ட நோ இறுதி மூச்சாகியது. எல்லோரையும் மறந்தார், தெய்வத்துடன் சேர்ந்தார். இதுவே பெரியார்களின் மறைவு. ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார்.''

அன்னார் பன்னெடுங்காலம் பல நற்பணி புரிந்தவர். கடமையிற் சிறந்தவர். தன்கடையே தெய்வமென மதித்தவர். எல்லோருடனும் அன்போடும், பண்போடும் பழகி எல்லோர் உள்ளத்திலும் கலந்தவர். அவரின் இழப்பு எல்லோருக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அவர் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சுற்றத்தார், நண்பர்களுக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

சாந்தி! சாந்தி!!

மு. குமாரவேலு,
ஆசிரியர்
மூளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

திரு. சி. நவரத்தினம் அவர்கள் என்னுடன் மூளாய் ஐக்கிய வைத்தியசாலையில் ஒன்முக வேலை செய்துள்ளோம். அவர் இயந்திரப் பிரிவில் கடமையாற்றினுலும் என்னுடன் வந்து அளவளாவும் வேளைகளில் மிகவும் அன்புடனும், பண்புடனும் பழகி உள்ளார். எந்நேரமும் சுறுசுறுப்பும், வேலையில் கவனமும் அவருக்கு ஒரு தனிச்சிறப்பு எனலாம். இவரைப் பார்த்து மற்றவர்கள் படிக்க வேண்டிய முதற்பாடம் அவை எனலாம். இவரின் திடீர் மறைவைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தேன். இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நா. பொன்னுத்துரை
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்
கன்ரீன்.

---

எம் தாயின் பூ முகத்தைப் பார்க்க மனம் பொறுக்கவில்லை
மாமா நீர் போன தெங்கே மாமிக்கோ சொல்லாமல்
தாவி வந்து எமை அணைத்து நிலா காட்டி அமுதூட்டி
நித்திரையில் வளர்த்தி விட்டுப் போனது போல் போனீரே
போகு முன்பு பூமுகத்தால் நாம் டட்டா காட்டவில்லை
பட்டாடை நாம் உடுத்தி பவனி வர மெய்சிலிர்த்தோம்
உன் பிரிவால் மெய் வருந்தி வாடுகிறேம் நாமெல்லாம்

இங்ஙனம்
**மருமக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உரை

என் தெய்வத் துணைவனாகவும்
எங்கள் அன்புத் தந்தையாகவும்
பாசத்துக் குரிய சகோதரனாகவும்
தங்க உள்ள மாமாவாகவும்
பாரில் இனிய பேரனாகவும்
பண்பின் சிகரப் பெரியப்பாவாகவும்
தணியா பாசப் பெருக்குடன்
சீராட்டிப் பரிந்து பாராட்டி
வளர்த்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரராகி விட்டார் என்ற செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களிற்கும், மரணக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், இதர உதவிகளைச் செய்தவர்களுக்கும், இன் நினைவுமலரை வெளியிட உதவிய அச்சகத்தாருக்கும், இன்று அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையில் சமுகம் அளித்த அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

எங்கள் நெஞ்சில் நிறைந்து நீங்காத
நினைவு கொண்டிருக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

மூளாய்,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

சின்னத்துரை + பாக்கியம்

- மகேஸ்வரி + சின்னையா
  - சிவபாக்கியம்
  - துரைராசா
  - நந்தினி
- நவரட்ணம் + புவனேஸ்வரி
  - புலேந்திரன்
  - தர்மபாலன்
  - ஜெயரஞ்சனி + தமிழ்ச்செல்வன்
    - தர்சா
    - கார்த்திகா
    - நிரோசா
  - பத்மலோசனி
  - கிருஷ்ணவதனி
- பாலகிருஷ்ணன் + விமலாதேவி
  - மதனகோபால்
  - மங்களேஸ்வரி
  - ரவிச்சந்திரன்
- சின்னராசா + தனலச்சுமி
  - காந்தன்
  - இளங்கோ
  - கிரிசா
- மகேந்திரன் + நிர்மலா
  - தவேந்திரன்
  - குலேந்திரன்
  - தனேந்திரன்
  - லோகேந்திரன்
  - கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org